Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT, HOSUR

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions<br>Prosecution<br>Depositions of witness for | CC. No. 108/2019<br><br>PW. 1 |

Court

| | | |
|---|---|---|
| Time | : | 12.10 pm - 12.50 pm |
| Name | : | **திரு. கிருஷ்ணன்** |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 72 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.07.2022.

**முதல் விசாரணை :**

**நான் தற்பொழுது பெங்களுரில் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் சூளகிரி தாலூகாவிலுள்ள புக்கசாகரம் ஆகும். நான் ஓய்வு பெற்ற IAS அதிகாரி ஆவேன். நான் ஓய்வு பெற்ற பிறகு இன்ஷிங் டெவலப்பர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற பெயரில், பெங்களுரில் சொந்தமாக நிறுவனம் வைத்து அதன் இயக்குநராக மேற்படி நிறுவனத்தை நடத்தி வருகிறேன். நான் க. எண் 263, 6th cross, 15th main RMV 1st Stage, Shathasivam Nagar, Bangalore–ல் குடியிருந்து வருகிறேன். நான் எனது**

மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வசித்து வருகிறேன். கடந்த 27.02.2019 ஆம் தேதி காலை 9.45 மணிக்கு நான் பெங்களூரிலிருந்து, ஒசூருக்கு சிவில் வழக்கு – 342/2018 தொடர்பாக எனது வழக்கறிஞர் விஜய்குமாரை, தாலூகா ஆபிஸ் எதிரே 1st floor–ல் உள்ள அவரது அலுவலகத்தில் சந்திப்பதற்காக வந்தேன். பின்னர் அந்த சிவில் வழக்கு சம்மந்தமான written Statment affidavit, கையொப்பம் செய்து விட்டுஅதே நாள் காலை 10.00 மணிக்கு நான் கீழே வந்தேன். அப்பொழுது 1–ம் எதிரி முனிச்சந்திரா நான் சென்ற வழக்கறிஞர் அலுவலகத்திற்கும், தாலூகா ஆபிஸிற்கு எதிராக உள்ள ரோட்டில் Hero honda splender plus, பதிவெண் TN 70 V 4394 என்ற இருசக்கர வாகனத்தில் அமர்ந்துகொண்டு என்னை பார்த்தவுடன் உடனடியாக யாருக்கோ போன் செய்து தகவல் சொன்னார், அவர் தற்பொழுது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. அவர் ஆஜராகும் பட்சம் என்னை எப்பொழுது அழைத்தாலும், நான் அவரை அடையாளம் காட்டுவேன். பின்னர் நானும் எனது ஓட்டுநர் உமேஷீம் நாங்கள் வந்த Toyoto fortunare கார் பதிவெண் –KA 04 MQ 0499 ஏறி, டிரைவர் உமேஷ் ஓட்ட ரிங்க் ரோடு, முனிஷ்வர் நகர் வழியாக சென்றபொழுது, சுமார் காலை 10.10 மணிக்கு எங்கள் பின்னால் 1–ம் எதிரி முனிச்சந்திரா தனது Hero honda splender plus, பதிவெண் TN 70 V 4394 என்ற இருசக்கர வாகனத்தில் எங்களை பின்தொடர்ந்து வந்தார். அப்பொழுது 2 மற்றும் 3–ம் எதிரிகள் குவாலிஸ் கார் பதிவெண் KA 01Z 9979 என்ற காரில், நாங்கள் வந்த காரை இடது பக்க முந்தி சென்றார்கள். தற்பொழுது நீதிமன்றத்தில் உள்ள ஆஜர் எதிரிகள்தான் எங்களை முந்தி சென்றார்கள். அப்பொழுது நாங்கள் வந்த காரை செல்லவிடாமல் தடை செய்தார்கள். அதே நேரத்தில் 1–ம் எதிரி முனிச்சந்திரா தனது Hero honda splender plus, பதிவெண் TN 70 V 4394 என்ற இருசக்கர வாகனத்தில் எங்கள் காரின் வலதுபுறம் வந்து நின்றார். அப்பொழுது

மூன்று எதிரிகளும் அந்த ரோட்டின் பொது இடத்தில் வைத்து தேவடியா மகனே என்று தகாத வார்த்தையால் திட்டியும், சம்பங்கி ராமையா மற்றும் அவரது மனைவியை எப்படி கொன்றோமா அதேபோல் உன்னையும் கொலை செய்துவிடுவோம் என்று மிரட்டி, அவர்களின் வலது கையால் எனது மூக்கில் அடிக்க வந்தார்கள். அதன் தொடர்ச்சியாக உயிர் பயத்தில் நான் காரின் கண்ணாடியை ஏற்றிவிட்டேன். பின்னர் வண்டியை யுடேர்ன் செய்து ஒரு 100 கிலோ மீட்டர் வேகத்தில் பெங்களூர் சென்றுவிட்டேன். வழக்கறிஞர் சம்பங்கி ராமையா எனது மூத்த அண்ணனின் மகனாவார். 2–ம் எதிரி ராஜப்பா சம்பங்கி ராமையாவின் சொந்த சகோதரர் ஆவார். 3–ம் எதிரி, 2–ம் எதிரியின் மனைவி ஆவார். நான் பாகலூரிலுள்ள பாரத் பெட்ரோலியம், பெட்ரோல் பங்கு லைசன்சஸை சம்பங்கி ராமையாவிற்கு வாங்கி கொடுத்து மேலும், பண உதவியும் செய்தேன். 2–ம் எதிரி ராஜாப்பா மேற்படி பெட்ரோல் பங்கின் நிர்வாகத்தை பார்த்து கொண்டு வந்தார். மேற்படி பெட்ரோல் பங்கின் வரவு செலவு மற்றும் பணக்கையாடல் சம்மந்தமாக 2–ம் எதிரி ராஜாப்பாவிற்கும், சம்பங்கி ராமையாவிற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. பின்னர் மேற்படி, 2–ம் எதிரி ராஜப்பாவும், சம்பங்கி ராமையாவும் சமாதானமாகிவிட்டார்கள். சம்பங்கி ராமையா ரூ. 2,00,000/–ஐ 2–ம் எதிரி க்கு கொடுத்தார். மேலும், புக்கசாகரம் கிராமத்திலுள்ள தனது சொத்துகளை சம்பங்கி ராமையா 2–ம் எதிரிக்கு கொடுத்தார். பின்னர் மேற்படி பெட்ரோல் பங்கின் நிர்வாகத்தை சம்பங்கி ராமையாவின் மனைவி பார்த்துகொண்டு வந்தார். இதனால் 2–ம் எதிரியும், 3–ம் எதிரியும் சம்பங்கி ராமையாவிற்கு எதிராக சதிதிட்டம் தீட்டி கொலை செய்தார்கள். மேற்படி வழக்கில் SC No: 372/2002, Cr. No: 222/2000 கிருஷ்ணகிரி அமர்வு நீதிமன்றத்தில் நான் 2–வது சாட்சியாக இருந்தேன். மேற்படி SC No: 372/2002, Cr. No: 222/2000 என்ற வழக்கில் தற்பொழுது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 2–ம்

எதிரியும், தண்டனை பெற்றார். மேற்படி வழக்கில் நான் சாட்சியம் அளித்ததால் எதிரிகள் சேர்ந்து முன்விரோதம் காரணமாக என்னிடம் பிரச்சனை செய்து வருகிறார்கள். மேற்படி வழக்கில் SC No: 372/2002, Cr.No: 222/2000 பெயிலில் வந்த 2–ம் எதிரி மீண்டும் பெங்களூருக்கு வந்து என்னிடம் பிரச்சனை செய்து வந்தார். இது சம்மந்தமான வழக்கு HSR Police Station–ல் 37th Metropolitan Magistrate Court –ல் வழக்கு நிலுவையில் உள்ளது. மறுநாள் 28.02.2019 ஆம் தேதி மதியம் 1.30 மணிக்கு ஒசூர் நகர காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்பொழுது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் நான் தட்டச்சு செய்து கொடுத்த புகார்தான். அந்த **புகார் அ.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது நீதிமன்றத்தில் 1–ம் எதிரி ஆஜராகததால் அவரை அடையாளம் காட்ட மறுபடியும் நீதிமன்றத்தில் ஆஜராகி மேலும், இந்த வழக்கு சம்மந்தமான பிற ஆவணங்களையும் நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன்.

மேற்படி வழக்கு சம்மந்தமான பிற ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காக காலஅவகாசம் வழங்கபட்டு அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஓம்/– C.சவித்ரா,

குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எண்.2,

ஓசூர்